**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண். 135/2022**

**Deposition of witness of Defendant – D.W.1 (வீரய்யா)**

**25.02.2026**

**பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி வீரய்யா என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எனக்கு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 இல் கண்ட சரத்துக்கள் சரியாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 இல் கண்ட சொத்துக்களை பொறுத்து தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.
2. தாவா சொத்துக்கள் வேறு, நான் கட்சி செய்யும் சொத்துக்கள் வேறு என்றால் நியாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வம்சாவழி பட்டியலில் கண்டுள்ள காதர்மைதீன் ராவுத்தர் தான் வா.சா.ஆ.1 இல் குறிப்பிட்டுள்ள காதர்மைதீன் ராவுத்தர் என்றால் அதுபற்றி எனக்கு நியாபகம் இல்லை.
3. எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் ஷேக்முகமதுவின் அப்பா மற்றும் தாத்தா பெயர் எனக்கு நியாபகம் இல்லை.
4. தாவா சொத்துக்கள் அனைத்தும் வா.சா.ஆ.1 இல் கண்ட சைதாமுகமது ராவுத்தரின் மகன்களால் அப்பாவு சோழகர் மற்றும் சன்னாசி சோழகர் ஆகியோருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது கிரையதாரர்களிடம் மேற்படி விவரம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டேன், மேற்படி நபர்கள் எனது கிரையதாரர்களின் வம்சாவழி அல்ல என சொன்னார்கள். மேற்படி விவரத்தை எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.
5. நான் உண்மையான நபர்களிடம் கிரையம் வாங்கியிருந்தால் வம்சாவழி தொடர்பாக நான் விசாரணை செய்தது குறித்து எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றும், நான் மோசடி பத்திரம் ஏற்படுத்திய காரணத்தால் தான் அதுபற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.
6. வாதி கிரையம் பெற்ற நபர்கள் வேறு, நான் கிரையம் பெற்ற நபர்கள் வேறு என்று வேறுபடுத்தி காட்டும் விதமாக எதிர்வழக்குரையுடன் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.
7. தாவா சொத்துக்கள் 1958 ஆம் வருடமே எனது கிரையதாரர்கள் மற்றும் அவர்களது சகோதரர்களால் சட்டப்படி சன்னாசிசோழகர் மற்றும் வாதியின் முன்னோர்களிடம் கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.
8. ஏற்கனவே முன்னோர்களால் கிரையம் கொடுக்கப்பட்ட பிறகு அவரது வம்சாவழியினரால் மீண்டும் கிரையம் கொடுக்க சட்டத்தில் இடம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து என்னால் மோசடியாக பத்திரம்

ஏற்படுத்தப்பட்டு அதன் பிறகு மோசடியாக வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்துக்கள் 1958 ஆம் ஆண்டு முதல் வாதியின் முன்னோர்கள் அனுபவத்தில் இருந்து வந்து, அதன் பிறகு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

10. மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணமும், அதன் பிறகு ஏற்பட்ட ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

11. எனது கிரையதாரர் பெயரில் இருந்த பட்டா சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையான நபர்களிடம் கிரையம் பெற்றிருந்தால் இவ்வழக்கில் எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

**திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
**சார்பு நீதிபதி, கீரனூர்.**